# மழைநீர் சேகரிப்புத் திட்டம்: அதிகாரிகள் தீவிர ஆய்வு

சென்னை, ஜூலை 7: மழைநீர் சேகரிப்புத் திட்டம் குறித்து சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 200 வார்டுகளில் அதிகாரிகள் தீவிர ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட 200 வார்டுகளில் சுமார் 12 லட்சத்து 70 ஆயிரம் கட்டடங்கள் உள்ளன. இந்தக் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் உள்ளனவா என்பது குறித்து ஆய்வு செய்யவும், முறையாகப் பராமரிக்கப்படாத மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வரும் வகையிலும் வார்டுக்கு ஒரு குழு வீதம் 200 வார்டுகளுக்கு 200 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுவினர் வார்டுக்கு 1,000 வீடுகள் என மொத்தம் 2 லட்சம் கட்டடங்களில் வரும் ஆகஸ்ட் 31-ஆம் தேதிக்குள் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் வார்டு வாரியாக ஆய்வுப் பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், 'கடந்த 10 ஆண்டுகளில் 200 நாள்களுக்கும் மேலாக பெரிய அளவிலான மழை சென்னை மற்றும் சுற்று வட்டாரத்தில் பெய்யாதது இதுவே முதல்முறையாகும். இதனால், சென்னை சுற்றுவட்டாரத்தில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து கடும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையில் ஆகஸ்ட் 31-ஆம் தேதிக்குள் 2 லட்சம் வீடுகளில் மழைநீர் கேகரிப்பு அமைப்பை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக தெருவாரியாக ஆய்வு நடத்தி வருகின்றனர். இதுவரை 1 முதல் 200 வார்டுகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. மாநகராட்சிக்கு உள்பட்ட 210 நீர் நிலைகளைக் கண்டறிந்து அதில், 53 ஏரிகளை ரூ.20 கோடியில் புனரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது' என்று தெரிவித்தனர்.

---

**கடன் வசூல் தீர்ப்பாயம் எண்-II, சென்னை முன்னிலையில்**

4வது தளம், தேவா டவர்ஸ், எண்.770-A, அண்ணா சாலை, சென்னை-600 002

**O.A.No.419 of 2019**

பாரத ஸ்டேட் பாங்கு, வேளச்சேரி கிளை, எண்.37A, வேளச்சேரி மெயின் ரோடு, சென்னை-600 042. ...மனுதாரர்

- எதிர் -

Mrs.தீபா V.R. & மற்றொருவர் ...பிரதிவாதிகள்

பெறுநர்,

1. Mrs.தீபா V.R., W/o.Mr.ஹரி L,
2. Mr.ஹரி L., S/o.லிங்கேசன்,

இருவரது முகவரி: எண்.2050, அம்மன் நகர் மெயின் ரோடு, காட்டுப்பாக்கம், சென்னை-600 056. ...பிரதிவாதிகள்

அம்மையீர் / ஐயா,

மேற்கூறிய வழக்கில் எனது மனுதாரர் உங்களுக்கு எதிராக DRT-II, முன்னிலையில் O.A.எண்.419/2019 மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். மாண்புமிகு தீர்ப்பாயம் **26.07.2019** அன்று காலை **11.30** மணிக்கு நீங்கள் நேரிலோ அல்லது உங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. தவறினால் நீங்கள் இல்லாமலே வழக்கு விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

M/s.L.ராம்குமார்,
K.கணபதி
மனுதாரரின் வழக்கறிஞர்

---


**ASHOK LEYLAND**
Aapki Jeet. Hamari Jeet.

அசோக் லேலண்ட் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 1, சர்தார் பட்டேல் ரோடு, கிண்டி, சென்னை 600 032
CIN: L34101TN1948PLC000105, போன்: +91 44 2220 6000 பேக்ஸ்: +91 44 2220 6001
இணையதளம்: www.ashokleyland.com, மின்னஞ்சல்: secretarial@ashokleyland.com

**70வது ஆண்டு பேரவைக் கூட்டம் ரிமோட் மின்னணு வாக்களிப்பு பற்றிய தகவல் மற்றும் புத்தகம் மூடல் பற்றிய அறிவிப்பு**

இதன் மூலம் அறிவிப்பதாவது: பேரவைக் கூட்டஅறிவிப்பில் காணும் அலுவல்களைக் கவனிப்பதற்காக, கம்பெனி உறுப்பினர்களின் **70வது ஆண்டு பேரவைக்கூட்டம்** (AGM) **புதன்கிழமை ஜூலை 31, 2019 பிற்பகல் 2.45 மணிக்கு 'காமராஜ் நினைவரங்கம், 498-500, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600006**, எனும் முகவரியில் நடைபெறவுள்ளது. ஆண்டு அறிக்கை, அனுமதிச்சீட்டு மற்றும் பேரவைக் கூட்டத்திற்கான அறிக்கை ஆகியவவை உறுப்பினர்களுக்கு உரிய முறையில் அனுப்பப்பட்டுவிட்டன. அங்கத்தினர்களின் வாக்களிக்கும் உரிமை அவர்களிடம் ஜூலை 24, 2019 (நிர்ணயிக்கப்பட்ட தேதி) அன்று உள்ள பங்குகளை பொருத்து அமையும்.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108 ஷரத்துகள் மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்க வேண்டிய கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014-விதி 20, இணங்க அவ்வப்போது திருத்தப்பட்ட விதிகள் இருப்பின் அவற்றுடன் மற்றும் SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) ஒழுங்கு முறைகள் 2015 (SEBI பட்டியலிடும் ஒழுங்குமுறைகள்) ஒழுங்கு விதி-44க்கு இணங்க, மேற்படி AGM-ல் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது வாக்களிப்பதற்கான தங்களது உரிமையைப் பயன்படுத்த கம்பெனி வசதிகளை அளிக்கிறது. உறுப்பினர்கள் ரிமோட் மின்னணு வாக்களிப்பு (AGM நடக்கும் இடம் அல்லாத மற்ற இடத்திலிருந்து வாக்களிக்கும் வசதி) மூலம் வாக்களிக்கலாம். மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்குவதற்கு நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிட் (NSDL) நிறுவன சேவையை கம்பெனி ஈடுபடுத்தியுள்ளது.

ரிமோட் மின்னணு வாக்களிக்கும் வசதி ஜூலை 27, 2019 சனிக்கிழமை அன்று காலை 9.00 (IST) மணிக்கு தொடங்கி ஜூலை 30, 2019 செவ்வாய்கிழமை அன்று மாலை 5.00 (IST) மணிக்கு முடிவுறும். மேற்குறித்த தேதி நேரத்திற்குப்பிறகு ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. தீர்மானத்தின் மீது ஒருமுறை வாக்களித்துவிட்டால் அதனை மாற்றமுடியாது.

கூட்டம் குறித்த அறிவிப்புடன் யூசர் ID மற்றும் பாஸ்வோர்டு மற்றும் ஏனைய விவரங்கள் அடங்கிய ரிமோட் மின்னணு வாக்களிப்பு தொடர்பான தகவல் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுவிட்டன. அந்த தகவலும், கூட்டம் குறித்த அறிவிப்பும், கம்பெனி இணைய -தளத்திலும் (www.ashokleyland.com), NSDL இணையதளத்திலும் (www.evoting.nsdl.com) வெளியிடப்பட்டுள்ளன.

கூட்டம் பற்றிய அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு கம்பெனியின் பங்குகளை வாங்கியதன் மூலம் உறுப்பினர்களாகி நிர்ணயிக்கப்பட்ட தேதி அன்று பங்குகள் வைத்திருக்கும் எந்தவொரு நபரும் NSDL நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி evoting@nsdl.co.in-க்கு வேண்டுகோள் அனுப்பி தங்களுக்கான யூசர் ID மற்றும் பாஸ்வோர்டு சொல்லைப் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே NSDL வசம் மின்னணு வாக்குப்பதிவுக்காகப் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் தற்போது அவர்களிடம் உள்ள அதே யூசர் ID மற்றும் பாஸ்வோர்டு சொல்லைப் பயன்படுத்தி ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்குகளைப் பதிவு செய்யலாம்.

ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்குகளை பதிவு செய்த உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் மீண்டும் தங்களது வாக்குகளைப் பதிவு செய்ய தகுதியுடையவர்கள் அல்ல. ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்காத உறுப்பினர்கள், AGM-ல் வாக்குச்சீட்டு மூலம் தங்ளது வாக்குகளை பதிவு செய்யலாம்.

மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பான விசாரணைகள், சந்தேகங்கள் / மனக்குறைகள் எதுவும் இருப்பின் அவற்றுக்கு பின்வரும் முகவரியைத் தொடர்பு கொள்ளவும். செல்வி. பல்லவி மாத்ரே, மேலாளர், நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரீஸ் லிட்., 4வது தளம், 'A' விங், டிரேட் வோல்டு, கமலா மில்ஸ் வளாகம், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை - 400013. தொ.பேசி : 1800 222 990 / 91 22 2499 4200 / 91 22 2499 4545 மின்னஞ்சல்: evoting@nsdl.co.in.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91 ஷரத்துக்களுக்கு மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்க வேண்டிய SEBI பட்டியலிடும் விதிமுறைகள் 44க்கு இணங்க **உறுப்பினர்கள் பதிவேடும், பங்கு மாற்றல் புத்தகங்களும் ஜூலை 25, 2019 (வியாழக்கிழமை) முதல் ஜூலை 31, 2019 (புதன்கிழமை) வரை (இருநாட்கள் உட்பட) ஈவுத்தொகை வழங்கும் நோக்கத்திற்காக மற்றும் ஆண்டு பேரவைக் கூட்டத்தை முன்னிட்டும் மூடிவைக்கப்பட்டிருக்கும்.**

இயக்குநர் குழுவின் சார்பாக
**N ராமநாதன்**
கம்பெனி செயலாளர்

இடம் : சென்னை
தேதி : ஜூலை 6, 2019

Visit us at : www.ashokleyland.com

HINDUJA GROUP


---

**படிவம் A**

**பொது அறிவிப்பு**

(இந்திய நொடிப்புநிலை மற்றும் திவால் வாரிய ஒழுங்குமுறைகள்'2016 ன் (பெருநிறுவனங்களுக்கான நொடிப்புநிலை தீர்மான செயல்முறை) ஒழுங்குமுறை 6 ன் கிழ்)

**நியூ சென்னை டவுன்ஷிப் பிரைவேட் லிமிடெட் - ன் கடன்தாரர்களின் கவனத்துக்காக**

| பொருத்தமான விபரங்கள | | |
|---|---|---|
| 1. | பெருநிறுவன கடன்தாரர் | நியூ சென்னை டவுன்ஷிப் பிரைவேட் லிமிடெட் |
| 2. | பெருநிறுவன கடன்தாரர் இணைவு தேதி | 24/03/2006 |
| 3 | பெருநிறுவன கடன்தாரர் இணைவு / பதிவு உள்ள அதிகார மையம் | நிறுவனங்கள் சட்டம்' 1956 |
| 4. | பெருநிறுவன அடையாள எண் / வரையறுக்கப்பட்ட கடன் பொறுப்புக்கான பெருநிறுவன அடையாள எண் | U45202TN2006PTC059295 |
| 5. | பெருநிறுவன கடன்தாரரின் பதிவு அலுவலகம் மற்றும் முதன்மை அலுவலகம் (ஏதேனும் இருப்பின்) ஆகியவற்றின் முகவரி | சீக்கனகுப்பம் கிராமம், சேவூர், காஞ்சீபுரம், தமிழ்நாடு - 603 305 |
| 6. | பெருநிறுவன கடன்தாரரின் நொடிப்புநிலை ஆரம்ப தேதி | 05.07.2019 |
| 7. | நொடிப்புநிலை தீர்மான செயல்முறை முடிவுக்காக உத்தேசித்த தேதி | 01.01.2020 |
| 8. | இடைக்கால தீர்மான தொழில்முறையாளரராக செயல்படும் நொடிப்புநிலை தொழில்முறை யாளரின் பெயர் மற்றும் பதிவு எண். | திரு. L.K. சிவராமகிருஷ்ணன்<br>பதிவு எண்: IBBI/IPA-001/IP-P00045/2017-2018/10119 |
| 9. | வாரியத்துடன் பதிவு செய்யப்பட்ட இடைக்கால தீர்மான தொழில்முறையாளர் முகவரி மற்றும் மின்னஞ்சல் | முகவரி - 1/4, ரெங்காஸ், நான்காவது பிரதான சாலை, R.A புரம், சென்னை – 600 028<br>மின்னஞ்சல் : lks@rvkassociates.com |
| 10. | வாரியத்துடன் பதிவு செய்யப்பட்ட இடைக்கால தீர்மான தொழில்முறை யாளருடனான தகவல் தொடர்புக்கான முகவரி மற்றும் மின்னஞ்சல் | முகவரி - 1/4, ரெங்காஸ், நான்காவது பிரதான சாலை, R A புரம், சென்னை – 600 028<br>மின்னஞ்சல் : newchennai.cirp@rvkassociates.com |
| 11. | கோரிக்கைகளை சமர்ப்பிக்க கடைசி தேதி | 19.07.2019 |
| 12. | பிரிவு 21 உட்பிரிவு (6A) ன் உட்கூறு (b) ன் கிழ் இடைக்கால தீர்மான தொழில்முறையாளரால் பிரிக்கப்பட்ட கடன்தாரர்கள் வகைகள் (ஏதேனும் இருப்பின்) | வீடு வாங்குபவர்கள் |
| 13. | ஒரு வகை கடன்தாரர்களின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாக அடையாளம் காணப்பட்ட நொடிப்புநிலை தொழில்முறையாளர்களின் பெயர்கள் (ஒவ்வொரு வகைக்கும் மூன்று பெயர்கள்) | 1. S. சாந்தகுமார்<br>IBBI/IPA-001/IP-P00930/2017-2018/11549<br>2. C.K. கிருஷ்ணமாச்சாரி<br>IBBI/IPA-001/IP-P00977/2017-2018/11607<br>3. J. வேலாயுதம்<br>IBBI/IPA-001/IP-P01012/2017-2018/11663 |
| 14. | (A). பொருத்தமான படிவங்கள் மற்றும் (B). அதிகாரப்பூர்வ பிரதிநிதிகளின் விபரங்கள் கிடைக்கும் முகவரி - | வலைதளம் : https://ibbi.gov.in/home/downloads<br>முகவரி -<br>1. S. சாந்தகுமார், B6, II வது தளம், ஜெம்ஸ் கோர்ட் 14, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034<br>மின்னஞ்சல் முகவரி - santha@kandv.in<br>2. C.K. கிருஷ்ணமாச்சாரி, பழைய எண். 109, புதிய எண். 30, II வது தளம், T P கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–600 014<br>மின்னஞ்சல் முகவரி - ckkchari@gmsil.com<br>3. J. வேலாயுதம், பழைய எண். 20, புதிய எண். 6, சிவராமன் தெரு, மந்தைவெளி, சென்னை – 600004.<br>மின்னஞ்சல் முகவரி - velayudhamj@gmail.com |

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், தேசிய நிறுவனங்களின் சட்ட தீர்ப்பாயம், சென்னை நியூ சென்னை டவுன்ஷிப் பிரைவேட் லிமிடெட் (U45202TN2006PTC059295) - ன் பெருநிறுவன நொடிப்புநிலை தீர்மான செயல்முறை தொடக்கத்துக்கு 2019 – ஜூலை – 05 ம் தேதியன்று ஆணை பிறப்பித்துள்ளது.

நியூ சென்னை டவுன்ஷிப் பிரைவேட் லிமிடெட் (U45202TN2006PTC059295) - ன் கடன்தாரர்கள், தங்களது கோரிக்கைகளுக்கான சான்றை, இடைக்கால தீர்மான தொழில்முறையாளருக்கு, இனம் எண்.10 க்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில், 2019 – ஜூலை – 19 ம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நிதிக்கடன்தாரர்கள் தங்களது கோரிக்கைகளுக்கான சான்றை மின்னணு முறையில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து இதர கடன்தாரர்களும் தங்களது கோரிக்கைகளுக்கான சான்றை நேரடியாகவோ, அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னணு முறையிலோ சமர்ப்பிக்கலாம்.

வரிசை எண். 12 க்கு எதிராக குறிப்பிட்டுள்ள வகை சார்ந்த நிதிக்கடன்தாரர்கள், வரிசை எண். 13 ல் குறிப்பிட்டுள்ள மூன்று நொடிப்புநிலை தீர்மான தொழில்முறையாளர்களில் எவரையேனும் வீடு வாங்குபவர்கள் என்ற வகையிலான கடன்தாரர்களின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாக செயல்பட படிவம் CA ல் தேர்வு செய்து கொள்ளலாம்.

தவறான அல்லது தவறாக வழி நடத்தும் கோரிக்கை சான்றுகளை சமர்ப்பித்தல் அபராதத்திற்கு வழிவகுக்கும்.

ஒப்பம்/-
L.K. சிவராமகிருஷ்ணன்
பதிவு எண்: IBBI/IPA-001/IP-P00045/2017-2018/10119

தேதி - 06.07.2019
இடம் - சென்னை

Dinamani
8/7/2019